தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

மாற்றம்

விலை ரூ.15 – மலர் 22 – இதழ் 5 – செப்டம்பர் 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

பல்வேறு மாவட்டங்களில் மகளிர் சுயஉதவிக் குழுவினருடன் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டங்கள்...

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும் செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

செப்டம்பர் 2020

அன்புள்ள சகோதரிகளே,

சுய உதவிக் குழு மகளிருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் முற்றம் இதழின் மூலம் மாதந்தோறும் எனது கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சுய உதவிக் குழுவினரான நீங்கள் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் அரசின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து, வைரஸ் பரவலைத் தடுக்கும் சாதனங்களான முகக் கவசங்கள், கிருமி நாசினிகள், கைகழுவும் திரவங்கள், பாதுகாப்பு உடைகள் போன்ற பொருட்களை தரமாக தயாரித்து வழங்கியதுடன், விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயல்பாடுகளிலும் தன்னலம் கருதாது ஈடுபட்டு அனைவரின் பாராட்டுகளையும் பெற்றது எனக்கு பெருமையளிக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காலத்திலும், உயிரைத் துச்சமென மதித்து செயல்பட்டு வந்த சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை சிறப்பிக்கும் வகையிலும் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பல்வேறு மாவட்டங்களிலும் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் தலைமையேற்று சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதுடன், அவர்களுடன் பல்வேறு விபரங்கள் குறித்து கலந்துரையாடுவது சுய உதவிக் குழுவினரின் செயல்பாட்டிற்கு மேலும் உத்வேகத்தையும், தன்னம்பிக்கையையும் அளித்து வருகிறது.

"ஆக்கம் அதர்வினாய் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

என்ற குறள் மொழிகேற்றார்போல், சுய உதவிக் குழுவினரின் அயராத உழைப்பின் பலனாக அவர்களைத் தேடி பெருமையும், புகழும் கிடைத்து வருகின்றன என்றால் மிகையாகாது. உங்களுக்கு எனது வாழ்த்துகள்.

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சிறிது சிறிதாக தளர்த்தப்பட்டு வருகிறது. "விழித்திரு... விலகியிரு... வீட்டிலேயே இரு" என்ற அரசின் அறிவிப்பிற்கேற்ப வீட்டிலேயே இருந்த மக்கள் தற்போது வெளியே நடமாடத் தொடங்கியுள்ளனர். கடைகள், தொழில் நிறுவனங்கள், பொது போக்குவரத்து போன்றவையும் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தங்களின் செயல்பாட்டை துவக்கியுள்ளன. இது நமக்கு மகிழ்ச்சியைத் தரும் நிகழ்வாக இருந்தாலும், கொரோனா வைரஸ் குறித்து நாம் இன்னும் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும்.

ஊரடங்கில் தளர்வுகள் அறிவித்துள்ள நிலையில், நமது பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும் வகையில் பொது இடங்களில் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், வெளியில் செல்லும் போது முகக் கவசம் அணிதல், அரசின் அறிவிப்புகளை தவறாது கடைப்பிடித்தல், தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்த்தல், கிருமிநாசினி கொண்டு அடிக்கடி கைகளைக் கழுவுதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் தவறாமல் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம்.

கொரோனா வைரஸால் ஏற்பட்ட பாதிப்புகள் ஏராளம். இருப்பினும், அவற்றிலிருந்து தற்போது மக்கள் சிறிது சிறிதாக மீண்டு வருகின்றனர். மற்றவர்களுக்கு எப்போதும் முன்னுதாரணமாக இருக்கும் நீங்கள், இந்த கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் செயல்பாட்டிலும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

சுய உதவிக் குழுக்கள் என்றால் தன்னலமற்றவர்கள், மற்றவர்களின் வளர்ச்சிக்கும் துணை நிற்பவர்கள் என்பதை எப்போதும் மற்றவர்கள் உணரும் வகையில் உங்களின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர் (பொ)

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

குறளும்-பொருளும்

பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்

எத்தனை நெருக்கடி வந்தாலும் பிறர் செய்வதற்கு அரிய செயல்களை உரிய வழிகளில் செய்து முடிப்பவர் பெருமை உடையவர் ஆவார்.

உள்ளே...

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் **05**

பல்வேறு மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுவினருடன் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டங்கள்... **06**

தமிழக நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் **12**

விவசாய உற்பத்தியாளர்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் குழுக்கூட்டம் **19**

ஊரகப் புத்தாக்கத் திட்டம் **29**

அம்மா இருசக்கர வாகன திட்டம் **33**

➜ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் ஜனவரி 2021 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஜனவரி 2021 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஜனவரி 2021 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 22
இதழ் 5
செப்டம்பர் 2020
விலை ரூ.15

● **கௌரவ ஆசிரியர்கள்**

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும்
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
தலைமை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

● **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

● **ஆசிரியர் குழு**

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கே. சுமதி, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

● **நிர்வாக ஆசிரியர்**

சி. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **நிதி நிர்வாகம்**

சு. இராமலெட்சுமி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**
● **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**
● **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
● **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

தேவை... 'நச்சுக் கிருமியினை விரட்ட சமூக கட்டுப்பாடு முறை'

அன்புள்ள வாசகர்களுக்கு,

இந்த 2020ம் ஆண்டு உலக சமுதாயத்திற்கே ஒரு விநோதமான மற்றும் வியப்பிற்குரிய ஆண்டாகும். பெரும்பாலானவர்கள் அச்சம் மற்றும் ஐய உணர்வுடனும், தூக்கமின்றியும் நாட்களை கடந்து செல்லும் நிலையை காண முடிகின்றது. மக்கள் முன்னெச்சரிக்கை உணர்வுடன் இருக்கும் இந்தச் சூழலில் பருவமழை ஆரம்பித்து ஆங்காங்கே நீர்நிலைகள் நிரம்பி வருவது விவசாய பெருமக்களுக்கு ஆறுதலாக இருக்கின்றது.

கொரோனா கற்றுக் கொடுத்த பாடங்களில் ஒன்று அடிக்கடி கைகளை கழுவுவது. அனைவரும் கைகளை அடிக்கடி கழுவுவதன் மூலம் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தண்ணீரை சேமிப்பதில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். தனித்து இருப்பது என்ற மற்றொரு செயலானது குடும்ப விழாக்களுக்கும், சமூக நிகழ்வுகளுக்கும் அதிக கூட்டம் சேர்ப்பதை தவிர்த்து, அளவோடு முக்கியமானவர்களை மட்டும் அழைத்து சிக்கனமாக செலவு செய்யவும் கற்றுக் கொள்ள வேண்டி உள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலும் கிராம பெரியோர்களால், கிராம பஞ்சாயத்து என்ற அமைப்பானது நடைமுறையில் இருந்து வந்தது. இந்த அமைப்புகள் சில சமூக கட்டுப்பாடு முறைகளை நடைமுறைப்படுத்தி வந்தன. இந்த சமூகக் கட்டுப்பாடுகளால் கிராமத்தில் ஒழுக்கமும், பல நன்மைகளும் ஏற்பட்டன. இதே முறையை கொரோனா நச்சுக் கிருமிகளை கட்டுப்படுத்துவதற்கு ஊராட்களில் செயல்பட்டு வரும் ஊராட்சி அளவிலான மகளிர் கூட்டமைப்புகள் பின்பற்றலாம்.

அந்தந்த ஊராட்சிகளில் கொரோனா நச்சுக் கிருமிகளை எதிர்த்துப் போராட சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் கீழ்கண்ட நான்கு முக்கிய பணிகளை செயல்படுத்தலாம். முதலாவது, கிராமங்களில் யாருக்கெல்லாம் தொற்று உள்ளது என்பதனை தேடிக் கண்டுபிடிப்பது, இரண்டாவது, தொற்று அறிகுறி தென்பட்டவர்களை அடையாளம் காண்பது, மூன்றாவது, இவ்வாறு கண்டறிந்தவர்களுக்குப் பரிசோதனை செய்வதற்கு எற்பாடு செய்வது, நான்காவது, தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுக்கு சிகிச்சைக்கு வழிகாட்டுவது.

அந்த நான்கு பணிகளையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்களோடு இணைந்து இளைஞர்களின் உதவியுடன் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பல குழுக்களாக பிரிந்து சிறப்பாக செயல்படுத்தி நச்சுக் கிருமிகளை விரட்டலாம்.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் *08.09.2020* அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., காவல் துறை தலைமை இயக்குநர் திரு. J. K. திரிபாதி, இ.கா.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., வருவாய் நிர்வாக ஆணையர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு. பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்திர மோகன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு. மகேஷ் குமார் அகர்வால், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுவினருடன் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டங்கள்...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 10.08.2020 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 10.08.2020 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள், கால்நடை பராமரிப்பு. பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., சர்க்கரை துறை ஆணையர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தாக்கர், இ.ஆ.ப., கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் 20.08.2020 அன்று தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. க. மலர்விழி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 20.08.2020 அன்று தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. க. மலர்விழி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 20.08.2020 அன்று வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப., திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. ப. சிவன் அருள், இ.ஆ.ப., இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எஸ். திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், 21.08.2020 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் சார்பில் கோவிட்-19 சிறப்பு நிதி உதவித் தொகுப்பின் கீழ் சுய தொழில் குழுக்களுக்கான மூலதன மானிய நிதி ஆகியவற்றை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வெ. சரோஜா, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கா. மெகராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில், 21.08.2020 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வெ. சரோஜா, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கா. மெகராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் 28.08.2020 அன்று திருவாரூரிலிருந்து தஞ்சாவூர் செல்லும் வழியில், திருவாரூர் மாவட்டம், கோயில்வெண்ணி அருகே ஆதனூர் கிராமத்தில் சாலையோர நெல் வயலில், களை பறித்துக் கொண்டிருந்த விவசாய பெண்களிடம், முகக்கவசங்களை வழங்கி கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வின் போது மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் உடனிருந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், 27.08.2020 அன்று கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத், சட்டமன்ற உறுப்பினர்கள், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில், 27.08.2020 அன்று கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில், 27.08.2020 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ. எஸ். மணியன், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் 28.08.2020 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் 28.08.2020 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் 28.08.2020 அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த. ஆனந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் 28.08.2020 அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த. ஆனந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 07.09.2020 அன்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 09.09.2020 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 09.09.2020 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழக நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழக நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில், 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பரிசோதனைகளை அதிகரித்தல், காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாம்கள், வீடுகள் தோறும் சென்று வைரஸ் தொற்று அறிகுறி உள்ள நபர்களை கண்டறிதல், வைரஸ் தொற்று பாதித்த நபர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை தனிமைப்படுத்துதல் போன்ற பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளின் மூலம் வைரஸ் தொற்று சென்னையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று பிற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிதல், காய்ச்சல் முகாம்கள் நடத்துதல், தனிமைப்படுத்தும் மையங்களை அமைத்தல், பல்வேறு விளம்பரப் பணிகளின் மூலமாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பாதுகாப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தி கொரோனா வைரஸ் தொற்றை தமிழகத்தின் பிற பகுதிகளில் முற்றிலும் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் முகக்கவசம், கிருமி நாசினி திரவம் மற்றும் கைக்கழுவும் சோப்பு தயாரிக்கப்பட்டு, தூய்மைக் காவலர்களுக்கு குறைந்த விலையில் தொடர்ந்து வழங்க வேண்டும். இதுநாள் வரை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 95,50,689 முகக்கவசங்கள் 1,58,540 லிட்டர் கிருமி நாசினி திரவங்கள் மற்றும் 1,03,506 லிட்டர் கை கழுவும் திரவம் தயாரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்ககத்தின் 2020-21ம் ஆண்டிற்கான வங்கி கடன் இணைப்பு குறித்தும், சுயஉதவிக் குழுக்களுக்கு குறைந்தபட்சம் ரூ.10 இலட்சம் சிறப்பு கடனுதவி வழங்கும் பணியின் நிலை குறித்தும், சுய உதவிக் குழுக்களுக்கு கொரோனாவிற்காக வங்கிகள் மூலம் சிறப்பு கடனுதவி வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் குறித்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாகம் ஆணையாளர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகள் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் கூடுதல் இயக்குநர்கள், தலைமை பொறியாளர்கள் உட்பட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வேளாண் கருவிகள் வாடகை மையம்

வேளாண் தொழிலை மேம்படுத்திடவும், வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு, குறு மகளிர் விவசாயிகள் மற்றும் நிலமற்ற கூலி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்தல், வேளாண் கருவிகள் வாடகை மையங்கள் (CHC) அமைத்தல், நிலமற்ற மற்றும் விவசாய கூலித் தொழிலாளர்களைக் கொண்டு தொழிலாளர் படை (Labour Army) அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒருபகுதியாக சிறு, குறு மகளிர் விவசாயிகள் நவீன முறையில் விவசாயம் மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை மூலம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு களுக்கும் மானியம் வழங்கி வேளாண் இயந்திர வாடகை மையம் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ள ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகள் ஒவ்வொன்றுக்கும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறையின் மானிய உதவியுடன் ரூ. 10 இலட்சம் மதிப்பிலான பவர் டில்லர், களை எடுக்கும் இயந்திரம், நாற்று நடும் இயந்திரம், ஸ்பிரேயர் உள்ளிட்ட நவீன வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படும். இந்த இயந்திரங்களை வாடகைக்கு விட்டு அதன் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் பெறவும், நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி மகளிர் விவசாயிகள் வேளாண்மைத் தொழிலை மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்க தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடனுதவிகள், மானிய உதவிகள், வேளாண் இயந்திரங்கள் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன.

திருப்பத்தூர் மாவட்டம்

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்ப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் 31.08.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் ஒன்பது ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகளுக்கு வேளாண் இயந்திர வாடகை மையம் அமைப்பதற்காக ரூ. 90 இலட்சம் மதிப்பிலான நவீன வேளாண் இயந்திரங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. ப. சிவன் அருள், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. மகேஷ்பாபு, ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. உமா மகேஸ்வரி, ஜோலார்ப்பேட்டை நகராட்சி ஆணையர் திரு. ராமஜெயம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. அருண், வேளாண் உதவி செயற்பொறியாளர் திரு. இராமச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. பிரேம், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் மற்றும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினர். தொடர்ந்து, இம்மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைக்க முதற்கட்டமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஆத்தூர், கொடூர், சிறுவாக்கம், நடுக்குத்தகை, வெல்லானூர், வானகரம், தரணி வராகபுரம், மதன் காளிகாபுரம், தாராட்சி மற்றும் மஞ்சங்கரணை ஆகிய 10 ஊராட்சிகளுக்கும் தலா ரூ. 10 இலட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்களை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கி, வேளாண் இயந்திர வாடகை மையத்தை துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார், உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்டம்

ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் தெருவோர சிறு வியாபாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி 11.09.2020 அன்று திருமங்கலத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்கள் கலந்து கொண்டு, அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.25,000/, நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு கடனுதவி அளிக்கும் பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) கடன் இணைப்பு திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ. 1.50 இலட்சம் வங்கிக் கடனுதவி, 794 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக ரூ. 4454.00 இலட்சம், கோவிட் 19 சிறப்பு வங்கிக் கடன் இணைப்பாக 235 குழுக்களுக்கு ரூ. 174.50 இலட்சம், 31 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ. 4.68 இலட்சம், 38 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ. 19.00 இலட்சம் மற்றும் ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ.10.34 இலட்சம் மதிப்பிலான வேளாண் வாடகை மைய கருவிகள் என ஆகமொத்தம் ரூ.4662.89 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், 25 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் மூலம் வாகனம் வாங்கிட அனுமதி ஆணையும், திருமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த 38 தூய்மைக் காவலர்களுக்கு சிறந்த முறையில் பணியாற்றியமைக்கான கேடயங்களும் வழங்கினார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் டி. ஜி. வினய், இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எம். பிரபாகரன், உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள், சாலையோர வியாபாரிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம்

திருநங்கைகள் சுய உதவிக் குழுவின் பாக்குமரத் தட்டு தயாரிப்பு மையம் திறப்பு விழா

தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டத்தின் கீழ் திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு திருநங்கைகளை உறுப்பினர்களாக கொண்டு அமைக்கப்பட்டுள்ள சேலஞ்ச் திருநங்கைகள் சிறப்பு சுய உதவிக் குழுவிற்கு, கனிமம் மற்றும் சுரங்கத் துறையின் நிதி உதவியாக ரூ.4.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு (SGSY) சுயம்சித்தா கட்டிட வளாகத்தில் சுற்றுச்சூழல் மாசுபாட்டினை ஒழிக்கும் பொருட்டு பிளாஸ்டிக்கிற்கு மாற்றுப் பொருளான பாக்கு மர இலை தட்டு மற்றும் பாக்கு மர பொருட்கள் தயாரிக்கும் அலகு அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாக்குமர இலை தட்டு தயாரிக்கும் அலகினை 09.09.2020 அன்று மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., சார் ஆட்சியர் திரு. சிம்ரான்ஜித் சிங் கலோன், இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ச. தனபதி, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர், அரசு அலுவலர்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம்

நலிவுற்ற சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்குதல்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கொரோனா ஊரடங்கு காலத்தில் தொழில்கள் நலிவடைந்ததால் வாழ்வாதாரத்தை இழந்த சுய உதவிக் குழுக்களுக்கு, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் சார்பில் கொரோனா சிறப்பு கடனுதவியாக 40 பயனாளிகளுக்கு ரூ. 1.77 கோடியினை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பழனி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. சீனுவாசராவ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்டம்

ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் செயல் படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய வற்றின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். கண்ணன் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய வற்றின் செயல்பாடுகள், பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) திட்டம், பெருங்கடன், வங்கிக் கடன் இணைப்பு ஆகியவற்றின் நிலை குறித்து ஆய்வு செய்த ஆட்சித் தலைவர் அவர்கள், கடன் இணைப்புகளை உடனடியாக வழங்கும்படி வங்கியாளர்களைக் கேட்டுக் கொண்டார். இந்த ஆய்வில் விருதுநகர் மாவட்ட வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கோ. குருநாதன், உதவித் திட்ட அலுவலர்கள், வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சேதுக்குவாய்த்தான் ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் 27.08.2020 அன்று பார்வையிட்டு அக்கூட்டமைப்பின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட மண்பாண்ட பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், செயற்கை நகைகள், ஆயத்த ஆடைகள், பெட்டிக்கடை ஆகியவற்றை நேரில் ஆய்வு செய்து, குழு உறுப்பினர்களிடம் தொழில் குறித்த பல்வேறு விபரங்களைக் கேட்டறிந்தார்.

கூட்டமைப்பு அமைக்கப்பட்ட விபரம், மேற்கொண்ட பயிற்சிகள், நிதி விபரம், தொழில் விபரங்கள், வங்கி கடன் இணைப்பு, கூட்டமைப்பு, மறு சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை கூட்டமைப்பின் நிர்வாகிகளிடம் கேட்டறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர், தொழில் மேம்பாடுகள் குறித்த பல்வேறு ஆலோசனைகள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி, உதவி திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார இயக்க மேலாளர், வட்டார இயக்க ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர் சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

➤ திருவண்ணாமலை மாவட்டம்

பழங்குடியின மக்கள் தொழில் குழுவின் கரிசூளையை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிடல்

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், மீசநல்லூர் ஊராட்சி அப்துல்கலாம்புரத்தில் வசித்து வரும் பழங்குடி இன மக்கள் கூலி வேலைக்குச் சென்று மிகக் குறைந்த கூலி பெற்று மிகவும் வறுமையில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் நிலையை அறிந்த திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்களின் சீரிய முயற்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் பல்வேறு துறைகளின் உதவி இப்பழங்குடி மக்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் தொழிற்கடன் பெற்று தற்போது கரி சூளை தொழில் குழு அமைத்துள்ளனர். இத்தொழில் மூலம் போதுமான வருவாய் பெற்று வரும் இக்குழுவினர் தற்போது மேலும் இரண்டு கரி சூளைகள் அமைத்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் பழங்குடியின மக்கள் அமைத்துள்ள கரி சூளைகளைப் பார்வையிட்டு, தொழில் குழு மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

➤ திருப்பூர் மாவட்டம்

திருப்பூர் மாவட்டத்தில் 15.08.2020 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவின் போது திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. விஜயகார்த்திகேயன், இ.ஆ,ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் பூமலூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு, வேளாண் பொறியியல் துறை மூலமாக ரூ. 10 இலட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

➤ நாமக்கல் மாவட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் ஆய்வு

நாமக்கல் மாவட்டம், எலச்சிப்பாளையம் வட்டாரம், கொன்னையார் ஊராட்சி அளவிலான செயல்பாடுகளை நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. மெகராஜ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். கொன்னையார் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 41 சுய உதவிக் குழுக்கள் இணைந்துள்ளன. இக்குழுக்களின் உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். இக்கூட்டமைப்பின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட்டமைப்பு மேலும் சிறப்பாக செயல்படத் தேவையான ஆலோசனைகளை வழங்கினார். இந்த நிகழ்வின்போது நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மரு. இரா. மணி, உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், களப்பணியாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் நம் தமிழகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா வைரஸ் தொற்று பரவலில் இருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைவரும் மேற்கொண்டு வருகின்றனர். நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் கீழ் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பிற்காகப் பயன்படுத்தப்படும் முகக் கவசங்கள், கிருமி நாசினிகள், கை கழுவும் திரவங்கள், பாதுகாப்பு உடைகள் போன்றவற்றை தரமாக தயாரித்து விற்பனை செய்வதுடன், கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், கபசுர குடிநீர் வழங்குதல், சமூக இடைவெளியைக் கடைபிடித்தல், நலிவுற்றோருக்கு உதவிகள் வழங்குதல், அரசின் அறிவுறுத்தல்களை அனைவரும் கடைப்பிடித்தல், காய்கறி மற்றும் மளிகைப் பொருட்களை வீட்டிற்கே சென்று வழங்குதல், சுகாதாரப் பணியாளர்களுக்கு உதவிகள் வழங்குதல், கைகளை அடிக்கடி கழுவுதல், முகக் கவசம் அணிதல், பொது இடங்களில் கிருமிநாசினிகள் வழங்குதல், அம்மா உணவகத்தின் மூலம் உணவுகள் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கொரோனா ஊரடங்கு காலத்தில் பொருளாதார பற்றாக்குறையால் சுய உதவிக் குழுவினரின் செயல்பாடுகள் தளர்வடையாமல் கொரோனா சிறப்பு நிதிஉதவித் திட்டத்தின் மூலம் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தொகையினை மூலதனமாகக் கொண்டு, சுய உதவிக் குழுக்கள் தங்களின் தொழில் நடவடிக்கைகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

கொரோனா ஊரடங்கு காலத்தில், சுய உதவிக் குழுக்களின் தன்னலமற்ற சேவையானது அனைத்துத் தரப்பினருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. சுய உதவிக் குழு மகளிரின் வெற்றிப் பயணத்தில் கொரோனா தொற்று பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கைப் பணிகள் அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது.

விவசாய உற்பத்தியாளர்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் குழுக்கூட்டம்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். வேளாண்மை மேற்கொண்டு வரும் 10,000 விவசாய உற்பத்தியாளர்களை உருவாக்குதல் மற்றும் அவர்களை மேம்படுத்துதல் தொடர்பாக மாநில அளவிலான ஆலோசனைக் குழுக் கூட்டம் நபார்டு வங்கியின் சார்பில் காணொலி காட்சி வாயிலாக அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் நபார்டு வங்கியின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் குழுக் கூட்டம் (PRC Meeting)



மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் சார்பில், இந்திய அரசு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் குழுக் கூட்டம் (PRC Meeting) 27.08.2020 அன்று நடைபெற்றது. புதுடெல்லியில் உள்ள மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் மற்றும் சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமையகம் ஆகியவற்றின் இடையே காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற இந்த ஆய்வுக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள், அடைந்துள்ள முன்னேற்றங்கள், தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் காணொலிக் காட்சி மூலமாகக் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

தெருவோர வியாபாரிகளின் தொழில்கள் மீள உதவிய பிரதம மந்திரியின் கடன் உதவித் திட்டம் (PMSVANidhi)

மார்ச் 2020 இந்திய மக்கள் அனைவருக்கும் ஒரு மறக்க முடியாத மாதம், கொரோனா என்னும் பெரும் தொற்றால் இந்த உலகம் முழுவதும் பாதிப்பு அடைந்த போது இந்திய மக்கள் அனைவரும் ஊரடங்கினால் வீட்டினுள் அடைபட்டனர். தெருவோரங்களில் கடைகள் வைத்து, பொருட்களை விற்பனை செய்து தங்களின் வாழ்வை நடத்தி வந்த தெருவோர வியாபாரிகள் கொரோனா ஊரடங்கால் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

தினம் தினம் நடக்கும் வியாபாரங்களை வைத்தே தங்களின் வாழ்வாதாரத்தை நடத்தி வந்த தெருவோர வியாபாரிகள் தங்களின் தொழில்களை மீண்டும் தொடங்க வழியின்றி தவித்து வந்தனர். இந்நிலையில் ஊரடங்கு உத்தரவு காலத்தில் தெருவோர வியாபாரிகள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு உதவிடும் வகையில் பிரதம மந்திரியின் PM-SVANidhi திட்டத்தின் மூலம் சாலையோர வியாபாரிகள் ரூ.10 ஆயிரம் வரை வங்கியின் மூலம் கடன் பெறலாம் என மத்திய அரசு அறிவித்திருந்தது.

விருதுநகர் மாவட்டத்தின் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள 1186 தெருவோர வியாபாரிகளுக்கு தங்களின் வாழ்வின் ஆதாரமான தொழிலை மீண்டும் தொடங்க இந்தத் திட்டம் ஒருவழிகாட்டியாக அமைந்தது. விருதுநகரை பொறுத்தமட்டில் நகராட்சிகளில் சிறு குறு வியாபாரிகளே அதிகம்.

விருதுநகர் மாவட்டத்தின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய அமைப்பாளர்களின் திறன்மிகு நடவடிக்கையால் 554 விண்ணப்பங்கள் Online-ல் பதிவேற்றப் பட்டதில் 195 பேருக்கு அவர்களின் வங்கிக் கணக்கில் ரூ.10 ஆயிரம் கடன் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிகளின் மூலம் முறையாக பிரதம மந்திரியின் PM-SVANidhi வங்கிக் கடன் கிடைக்கப் பெற்று வருகின்றது.

பிரதம மந்திரியின் PM-SVANidhi திட்டத்தின் மூலம் வங்கிக் கடன் கிடைக்கப் பெற்று வரும் தெருவோர வியாபாரிகள் கொரோனா பெரும் தொற்றின் கால கட்டத்தில் கந்து வட்டி என்னும் அரக்கனிடம் சிக்காமல் தங்களின் தொழிலையும், வாழ்க்கையையும் பேணி பாதுகாத்துள்ளனர். அதற்கு வழிகாட்டியாய் இருந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

➤ திருப்பூர் மாவட்டம்

பிரதம மந்திரியின் தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்பு நிதி (PM-SVANidhi) பெற்ற சாதனையாளர்களின் கதை

என் பெயர் முகமது காமில்; வயது 53. நான் திருப்பூர் மாநகராட்சி காங்கேயம் ரோடு அருகில் சுமார் 25 வருடங்களாக பூ வியாபாரம் செய்து வருகிறேன். எனது வருவாய் மட்டுமே எனது குடும்பத்திற்கு ஆதாரமாக உள்ளது. இது நாள் வரையிலும் நான் எந்த ஒரு வங்கியிலோ பிற எந்த ஒரு வெளிநபர்களிடமும் கடன் வாங்காது உள்ளதைக் கொண்டே சிக்கனமாக வாழ்ந்து வந்தேன்.

கடந்த 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டையினை மாநகராட்சியின் மூலம் பெற்றேன்.

இவ்வருடம் கொரோனா பெருந்தொற்றின் காரணமாக வியாபாரம் செய்ய முடியாமல் எனது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. எங்களுக்கு உதவ யாரும் இல்லாத சூழலில் பூக்களை கொள்முதல் செய்து வியாபாரம் செய்ய மூலதனக் கடன் கிடைக்காமல் அன்றாட தேவைகளுக்குக் கூட மிகவும் சிரமப்பட நேர்ந்தது.

இச்சமயத்தில் பிரதம மந்திரியின் தெருவோர வியாபாரிகளுக்கான சுயசார்பு நுண்கடன் திட்டத்தைப் பற்றி சமுதாய அமைப்பாளர்கள் மூலம் தகவல் அறிந்தேன். அதன் அடிப்படையில் திருப்பூர், நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் PM-SVANidhi திட்டத்தில் வங்கிக் கடன் பெற பதிவு செய்தேன்.

எனது வங்கிக் கணக்கு பஞ்சாப் சிந்து வங்கியில் உள்ளது. கடந்த 31.07.2020 அன்று பஞ்சாப் சிந்து வங்கி திருப்பூர் கிளையில் ரூ. 10 ஆயிரம் வங்கிக் கடன் பெற்று அதன் மூலம் பூக்கள் கொள்முதல் செய்து வியாபாரம் செய்து வருகிறேன். இத்தொகையினை 12 மாதத் தவணையாக 7 சதவிகித வட்டி மானியத்துடன் திருப்பி செலுத்துவதால் எனது தினப்படி தேவையை இவ்வருமானத்தின் மூலம் பூர்த்தி செய்ய ஏதுவாக அமையும்.

இத்திட்டம் என்னை போன்ற நலிவடைந்த தெருவோர வியாபாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற வரப்பிரசாதமாகக் கருதுகிறேன். இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு இதன் மூலம் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

➤ சேலம் மாவட்டம்

தக்க சமயத்தில் உதவிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை மண்டலம், 43வது வார்டு, SNC காலனியில் ரவி என்கிற நான் என் குடும்பத்தோடு வசித்து வருகிறேன். நான் 32வது வார்டுக்குட்பட்ட நேரு கலையரங்கம் அருகில் கடந்த பத்து வருடங்களாக நடைபாதையில் கம்மங்கூழ் வியாபாரம் செய்து வருகிறேன். கொரோனா காலத்தில் போதுமான வருமானம் இல்லாததால் நானும் என் குடும்பமும் மிகவும் கஷ்டத்திற்குள்ளானோம். தற்போது PM-SVANidhi திட்டத்தின் மூலமாக பாரத ஸ்டேட் வங்கி (SBI) தேர் வீதி கிளையில் ரூ.10,000/-கடன் பெற்றேன். இதன் மூலம் கம்மங்கூழ் வியாபாரம் செய்து கொண்டே புதியதாக தள்ளுவண்டியில் பழ வியாபாரமும் செய்யத் துவங்கியுள்ளேன்.

இதன் மூலம் எனது வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது. என்னைப் போன்ற தெருவோர வியாபாரிகளின் வளர்ச்சிக்கு இத்திட்டம் உறுதுணையாக உள்ளது. தெருவோர வியாபாரிகளின் மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும் தெருவோர வியாபாரிகளின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் தக்க சமயத்தில் தேவையறிந்து நிதியுதவி அளித்த பாரத ஸ்டேட் வங்கி (SBI) தேர் வீதி கிளை வங்கி அலுவலர்கள் அனைவருக்கும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

➤ கடலூர் மாவட்டம்

வாழ்வாதாரத்தை மேம்படுத்த வங்கி கடன் உதவி பெற்று தந்த இயக்கம்

எனது பெயர் தங்கவேலு, கடலூர் மாவட்டம், ஆலடி ரோடு, சக்தி நகர் என்ற முகவரியில் வசித்து வரும் நான் கடந்த 10 ஆண்டுகளாக திருப்பூரிலிருந்து துணிகளைக் கொள்முதல் செய்து, விருத்தாச்சலம் நகராட்சிக்குட்பட்ட ஜங்ஷன் ரோட்டின் அருகில் தெருவோரத்தில் துணி வியாபாரம் செய்து வருகிறேன்.

கொரோனா வைரஸ் பரவல் காலத்தில் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு கட்டுப்பாட்டின்போது எனது வியாபாரம் பாதிக்கப்பட்டு வருமானமின்றி மிகவும் சிரமத்தில் எனது குடும்பத்தை நடத்தி வந்தேன். இந்த சூழலில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய அமைப்பாளர் என்னை தொடர்பு கொண்டு அரசு அறிவித்துள்ள தெருவோர வியாபாரிகளுக்கான PM-SVANidhi திட்டம் குறித்து எடுத்துக் கூறினார்கள்.

துணி கொள்முதல் செய்து வியாபாரம் செய்ய பணமின்றி தவித்த நான் சமுதாய அமைப்பாளர்களின் வழிகாட்டுதலின்படி PM-SVANidhi திட்டத்தில் விண்ணப்பித்து விருத்தாச்சலம் இந்தியன் வங்கியில் 30.07.2020 அன்று ரூ. 10,000/-கடன் பெற்று தற்போது துணி கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகிறேன். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 400/-முதல் ரூ. 600/-வரை வருமானம் ஈட்டுகிறேன். கொரோனா ஊரடங்கு காலத்தில் எனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில் எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வங்கி கடன் நிதி உதவி பெற்று தந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைத்துறையின் புறக்கடைக் கோழி வளர்ப்புத் திட்டத்தில் பயனடைந்த நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழுக்கள்

ஊரகப் பகுதியில் மட்டுமின்றி நகர்ப்புறங்களிலும் மகளிர் பயன் அடையும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களால் 2018 ஜூன் மாதம் தொடங்கப்பட்ட மகளிருக்கான புறக்கடைக் கோழி வளர்ப்பு திட்டத்தின் மூலம், பெண்கள் வீட்டில் இருந்து கொண்டே சுயமாக தொழில் செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்திலுள்ள பெண்களுக்கு நபர் ஒருவருக்கு 4 வாரங்கள் வளர்ந்த ரூ. 2500/- மதிப்புடைய 25 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டு, நோய் தொற்றாமல் வளர்க்கும் முறைகளும், உணவு முறைகளும் கால்நடை மருத்துவர்களால் ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் மகளிருக்கு சுயசார்பு ஏற்படுத்துதல், புறக்கடைக் கோழி வளர்ப்பை ஊக்குவித்தல் மற்றும் கோழி வளர்ப்பில் புரட்சியை உண்டாக்குதலை இலக்காகக் கொண்டு இதுவரை 77,000 மகளிருக்கு தமிழகம் முழுவதும் அந்தந்த பகுதிக்கு ஏற்ப 50 வகையான கோழிகள் தமிழக கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் கொரோனா பெரும் தொற்றால் தங்கள் வியாபாரம் மற்றும் தொழில்களை இழந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் காரியாப்பட்டி மற்றும் மல்லாங்கிணறு பகுதியைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். காரியாப்பட்டி கால்நடை மருத்துவர் டாக்டர். சத்தியவதி அவர்களின் மூலம் 151 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும், மல்லாங்கிணற்றில் கால்நடை மருத்துவர் டாக்டர். திருமுருகன் மூலம் 220 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் சமுதாய இடைவெளியைப் பின்பற்றி கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

விருதுநகர் மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பாராட்டு

விருதுநகர் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது மட்டுமல்லாது சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். விருதுநகர் வட்டார இயக்க மேலாண்மை அலகின் மூலம் அழகாபுரி ஊராட்சியில் அமைந்துள்ள பெருமாள் கோவில் கண்மாயில் நீர் இயக்க மேலாண்மைக்காக விருதுநகர் வட்டார சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் சுய உதவி குழு பயிற்றுநர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அந்தக் கண்மாயினை தூர் வாரினர். தற்போது பெய்த மழையில் பெருமாள் கோவில் கண்மாய் நிரம்பி உள்ளதால், அழகாபுரி ஊராட்சி மக்கள் சுய உதவிக் குழுவினரை பாராட்டுகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம்

அமுதசுரபி இயற்கை தோட்டம்

எனது பெயர் தமிழரசி. நான் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சி, சுப்பிரமணியபுரம் 3வது தெருவில் உள்ள நேசம் மகளிர் நகராட்சி சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். எங்கள் குழு உறுப்பினர்கள் 21.06.2016ல் மகளிர் திட்டம் மூலம் கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் 15 நாட்கள் நடைபெற்ற மாடித் தோட்டப் பயிற்சியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

பயிற்சிக்கு பின்னர் எங்கள் குழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சுழல் நிதியாக ரூ.10,000/ வழங்கப்பட்டது. மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாத்தில் இட வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. அந்த இடத்தில் அமுதசுரபி இயற்கை தோட்டத்தை துவங்கினோம். மாடித் தோட்டம் அமைத்து, பஞ்சகவ்யம், மண்புழு உரம், மண் கலவை போன்றவற்றை தயாரித்து, பயன்படுத்தி, தற்போது கீரைகள், காய்கறி நாற்றுகள், மூலிகைகள், அழகு செடிகள், நர்சரி செடிகள் போன்றவற்றை விற்பனை செய்து வருகிறோம்.

மேலும் எங்கள் குழு உறுப்பினர்கள் நகராட்சியில் உணவு கழிவை உரமாக மாற்றுவது பற்றிய பயிற்சியில் பயிற்றுநராக செயல்பட்டு வருவதுடன், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு மாடித் தோட்டம் அமைப்பது, இயற்கை உரங்கள் தயாரிப்பது குறித்து விழிப்புணர்வுடன் கூடிய பயிற்சியை வழங்கி வருகிறோம். கோவில்பட்டி நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அமுதசுரபி பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள எங்கள் குழுவிற்கு வழங்கப்பட்ட சுழல் நிதியில் இருந்து கடனுதவி பெற்று எங்களது நர்சரி கார்டனை விரிவாக்கம் செய்துள்ளோம்.

எங்கள் குழு கோவில்பட்டி நகராட்சி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் சிறப்பான குழுவாக செயல்படுவதற்கும், எங்களது வாழ்வாதாரம் மேம்பட்டு வருவதற்கும் காரணமான தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றக் கச்சேரி 2.0

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்.
கதை மாந்தர்கள் : ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் மீனா, கீதா மற்றும் லதா

சுய உதவிக் குழு அலுவலகத்தில் ஊக்குநர் மதி அமர்ந்திருக்கிறார். உறுப்பினர்கள் மீனா, கீதா மற்றும் லதா ஆகியோர் வருகின்றனர். மூவரும் அலுவலகத்தின் வெளியே உள்ள தண்ணீர் குழாயில் தங்களின் கைகளை சோப்பு போட்டு நன்கு கழுவி விட்டு வருகின்றனர். ஒவ்வொருவரும் முகக் கவசம் அணிந்து கொண்டிருக்கின்றனர்.

மதி: *வா... மீனா... வா கீதா... வா லதா வாங்க... வாங்க... வந்து உட்காருங்க...*

மீனா, கீதா மற்றும் லதா: *வணக்கம் மதி அக்கா, நல்லா இருக்கீங்களா?*

மதி: *நல்லா இருக்கேன். நீங்கள் நல்லா இருக்கீங்களா?*

லதா: *நல்லா இருக்கோம் அக்கா... எங்களை உடனே வரச் சொன்னீங்களே என்ன விஷயம் அக்கா...*

மதி: *அதுவா நம்ம நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பா செயல்படுத்தி வரும் தெருவோர வியாபாரிகளுக்கு கடன் உதவி அளிக்கும் சுய சார்பு திட்டம் பத்தி உங்களுக்கு சொல்லப் போறேன்.*

கீதா: *அந்தத் திட்டத்தோடு பெயர் என்ன அக்கா?*

மதி: *பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) என்பது அந்தத் திட்டத்தோட பெயர். தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்பு திட்டம் என்பது அத்திட்டத்தின் தமிழ் பெயர்.*

மீனா: *இந்தத் திட்டம் யாருக்காக அக்கா?*

கீதா: *நமக்கெல்லாம் இந்தத் திட்டத்தால பயன் கிடைக்குமா?*

மதி: *எல்லோரும் இந்தத் திட்டத்தால பயன் பெற முடியாது. நகர்ப்புறங்களில் உள்ள தெருவோர வியாபாரிகள் மட்டுமே இந்தத் திட்டத்துல பயனடைய முடியும்.*

லதா: *அப்படியா அக்கா... இந்தத் திட்டத்தால என்ன பயன்?*

மதி: *இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ரூ. 10,000/-கடன் வழங்கப்படும்.*

மீனா: *இந்தக் கடனை பெறுவதற்கு வியாபாரிகள் வங்கியில ஏதாவது அடமானமோ, பிணையமோ கொடுக்க வேண்டுமா அக்கா?*

மதி: *எந்தப் பிணையமோ / அடமானமோ கொடுக்க*

வேண்டியது இல்லை.

லதா: அப்படியா... இந்தக் கடனுக்கு வட்டி எவ்வளவு அக்கா?

மதி: இந்தக் கடனுக்கான வட்டியில 7 சதவிகிதம் அரசு மானியம் தராங்க.

கீதா: அட... இது நல்லாயிருக்கே... இந்தக் கடனுக்கான விண்ணப்பம் எங்க கிடைக்கும் அக்கா?

மதி: தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலோட செயல்படும் நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் அல்லது மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலுவலகங்கள் மூலம் pmsvanidhi.mohua.gov.in என்ற இணையத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

மீனா: விண்ணப்பிக்க ஏதாவது கட்டணம் செலுத்த வேண்டுமா அக்கா?

மதி: நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் விண்ணப்பங்களை கணினி வாயிலாக அனுப்புவதற்கு ரூ. 50/-கட்டணமாக செலுத்த வேண்டும்.

கீதா: இந்தத் திட்டத்துல சேருவதற்கு தேவையான ஆவணங்கள் என்ன அக்கா?

மதி: தெருவோர வியாபாரி என்பதற்கான அடையாள அட்டை, தெருவோர வியாபாரிகள் கணக்கெடுப்பு எண் (Survey Reference No) மற்றும் ஆதார் எண் போன்ற ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

கீதா: நாம விண்ணப்பம் அனுப்பியதற்கு ஏதாவது சான்று தருவாங்களா அக்கா?

லதா: இந்தத் திட்டத்தின் மூலம் கடனுதவி பெற விண்ணப்பித்தவுடன் பயனாளிகளின் கைப்பேசிக்கு நம்ம விண்ணப்ப எண் குறித்த குறுஞ்செய்தி (SMS) வரும்.

கீதா: பரவாயில்லையே இந்தத் திட்டம் ரொம்ப நல்லா இருக்கே...

மீனா: வாங்கிய கடனை எப்படி திருப்பிச் செலுத்தலாம் அக்கா?

மதி: 12 மாத தவணையில கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும்.

கீதா: 10 ஆயிரம் ரூபாய் மட்டும்தான் கடனாத் தருவாங்களா? அதிக தொகையில கடன் வாங்க என்ன செய்யணும் அக்கா?

மதி: வாங்கிய கடனை தவணை தவறாம கட்டினா மறுமுறை 20 ஆயிரம் ரூபாய் கடன் பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

லதா: அப்படியா... இந்தத் திட்டத்தால தெருவோர வியாபாரிகள் முன்னேறுவாங்க.

மதி: சரியாச் சொன்ன லதா, இந்த மாத முற்றம் புத்தகத்துல கூட பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் திட்டத்தால பயன் பெற்றவர்களோட வெற்றிக் கதையெல்லாம் வந்திருக்கு பாருங்க (முற்றம் புத்தகத்தை குழுவின் உறுப்பினர்கள் வாங்கிப் படித்துப் பார்க்கின்றனர்)

லதா: அட ஆமாம் அக்கா, கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்ட நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு நம்ம தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நல்லத் திட்டங்களாத்தான் செயல்படுத்தி வருது.

மீனா: இந்தத் திட்டம் குறித்து மேலும் விபரங்கள் தேவைன்னா யார்கிட்ட கேட்கலாம் அக்கா?

மதி: மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலுவலகங்கள் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார மையங்களை (CLC) அணுகி இந்தத் திட்டம் குறித்த மேலும் விபரங்களை கேட்கலாம்.

மீனா, கீதா மற்றும் லதா: நம்ம நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் செயல்படுத்தி வரும் சிறப்பான திட்டத்தை பற்றி விரிவாக சொன்னதுக்கு ரொம்ப நன்றி அக்கா. இப்ப நாங்க கிளம்பட்டுமா?

மதி: சரி போயிட்டு வாங்க... அடுத்த முறை வேறு திட்டம் குறித்து பேசலாம்.

லதா, கீதா, மீனா மூவரும் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

தளர்வும்... துளிர்வும்...

வாகனப் புகை குறைந்து
மூச்சுத் திணறலின்றி
நிம்மதியாய் சுவாசித்த
சாலையோர மரங்கள்
மீண்டும் தயாராகி விட்டன...
மூச்சுத் திணற!

பாலினம், வயது, சாதி, மத
பேதமின்றி
தனது மடியில்
அமர்ந்தும், துயில்ந்தும்
பயணிகளுடன் பயணித்து விட்டு
ஓய்வெடுத்த பேருந்துகளும்,
புகை வண்டிகளும்
மீண்டும் ஊர்கின்றன...
ஊர்வலமாய்!

குறும்படம், குழுப்படம்,
`செல்பி' என
இளைஞர்களின் உரசல்களின்றி
சோர்ந்திருந்த கடல் அலைகள்
மீண்டும் ஆர்ப்பரிக்கின்றன...
ஆரவாரத்துடன்!

ஆண்டுக்கணக்கில்
தினந்தோறும் மூச்சு விட்டு
வேர்வை சிந்தி உழைத்த
மாநகரப் பேருந்துகள்
மாதக் கணக்கில் முடங்கியதை
`தண்டச் சோறு' என சபித்த
பணிமனை இல்லாள்கள்
மீண்டும் புன்னகைக்கின்றன...
பூரிப்புடன்!

அனைத்து வித
அபிலாஷைகளையும்,
அத்துமீறல்களையும் பார்த்து
புன்னகைத்து வந்த
பூங்காக்களின்...
திரை அரங்குகளின்...
கடற்கரைகளின்...
ஓரத்து, பின் இருக்கைகள்
இன்னும் காத்திருக்கின்றன...
அரசின் ஆணைக்காக!

ஆக...
`மனிதத் தொற்றிலிருந்து'
தாங்களாகவே தளர்வின்றி
தனிமைப்படுத்திக் கொண்டு
துளிர்பவை...
அஃறிணைகள் மட்டுமே!

– ஜி. குமரன்,
மாநில திட்ட மேலாளர், DDU-GKY

மழைக்கால நோய்களும், பாதுகாப்பு முறைகளும்

மழைக்காலம்

மழை என்றாலே அனைவருக்கும் மகிழ்ச்சி ஏற்படும். மழைக்காலத்தை விரும்புவதற்கு பெரும் காரணம், மிதமான வெப்பநிலையில் சிந்தும் மழை துளிகள் நமக்கு பெரு மகிழ்ச்சியைத் தருவதாகும். மழையை நாம் எவ்வளவுக்கு அதிகம் ரசிக்கின்றோமோ, அந்த அளவு அதில் ஆபத்தும் உள்ளது. மழைக் காலத்தில் பொதுவாக பல நோய்கள் வரும் வாய்ப்புக்கள் அதிகம்.

சில நோய்களை விரைவில் குணப்படுத்தலாம். சில நோய்கள் உயிருக்கே ஆபத்தை விளைவிப்பாக இருக்கும். எனவே மழைக்காலத்தில் வரும் பொதுவான நோய்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில் அந்த நோய்களைப் பற்றி முன்பே தெரிந்து கொண்டால், அதிலிருந்து எளிதில் தப்பிக்கக்கூட முடியும்.

மழைக்காலத்தில் வரும் நோய்கள்

மலேரியா

பருவக் காலத்தில் வரும் நோய்களின் பட்டியலில் முதல் இடத்தை பிடிப்பது மலேரியா தான். காய்ச்சல், நடுக்கம், தசை வலி மற்றும் சோர்வு ஆகியவைகள் தான் மலேரியாவின் அறிகுறிகளாகும். இந்த நோயானது பெண் அனாஃபிலிஸ் கொசுக்களால் ஏற்படுகிறது. இவ்வகை கொசுக்கள் தண்ணீர் தேங்கியிருக்கும் இடத்தில் இனப்பெருக்கமடையும். எனவே மலேரியாவின் இடர்பாட்டை தடுக்க, வீட்டின் தண்ணீர் தொட்டியை அடிக்கடி கழுவ வேண்டும்.

வயிற்றுப் போக்கு

மழைக்காலத்தில் எளிதில் தாக்கும் நோய்களில் வயிற்று போக்கும் ஒன்று. சுத்தமில்லாத உணவை உண்பதாலும், தண்ணீரை பருகுவதாலும் ஏற்படும் இந்நோயில் கடுமையான வயிற்றுப் போக்கு (அக்யூட்டையரியா) மற்றும் தீவிரமான வயிற்றுப் போக்கு (குரோனிக் டையரியா) என இரண்டு வகைகள் உண்டு. இவை இரண்டையுமே வரும் முன் தடுத்து நிறுத்தலாம். அப்படியே வந்தாலும் கூட உரிய சிகிச்சை கொண்டும் குணமாக்கலாம். இந்நோயைத் தவிர்க்க சுத்தத்தைக் கடைப்பிடிப்பது முக்கியம். அதில் உண்ணும் முன் கையை கழுவுவது, எப்போதும் வெந்நீரைக் குடிப்பது போன்றவை அடங்கும்.

டெங்கு காய்ச்சல்

மழைக்காலத்தில் கொசுக்களால் ஏற்படும் இந்த காய்ச்சல் வந்தால், காய்ச்சலுடன் உடல் வலி, மூட்டு வலி மற்றும் தடிப்புகள் போன்றவை உண்டாகும். இந்த நோய் வருவதற்கான முக்கிய காரணம் டைகர் கொசுக்கள் தான். இந்த கொசுக்கள் வராமல் தடுப்பதற்கு பூச்சி விலக்கிகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும் நல்ல உடையை அணிந்து, முழுமையாக உடலை மூடிக் கொள்ள வேண்டும்.

சிக்கன் குனியா

ஏய்டெஸ் அல்போபிக்டஸ் கொசுக்கள் கடிப்பதால் வருவது தான் சிக்கன்குனியா. இந்த கொசுக்களானது தேங்கிய நீரில் தான் அதிகம் இனப்பெருக்கமாகும். மேலும் இது பகல் நேரத்தில் தான் கடிக்கும். திடீரென வரும் காய்ச்சலோடு சேர்ந்து வரும் மூட்டு வலி தான்

இதற்கான முக்கிய அறிகுறி. இதனை தடுக்க தண்ணீர் தொட்டிகளை சீரான முறையில் சுத்தப்படுத்தி, கொசுக்களை அழிக்கும் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

டைபாய்டு

டைபாய்டு என்ற நோய், தண்ணீரினால் வரும் நோயாகும். இது அதிகமாக பரவுவது மழைக்காலத்தில் தான். டைபாய்டு வர காரணமாக இருப்பது எஸ்.டைஃபி என்ற பாக்டீரியா. அசுத்தமான உணவு மற்றும் தண்ணீரை உபயோகிப்பதால், இந்த நோய் நம்முள் வந்து விடும். மேலும் இந்த நோய் சுகாதாரமற்ற சுற்றுப்புற சூழலை உருவாக்குவதாலும் பரவும். இந்த நோய்க்கான அறிகுறிகளாவன காய்ச்சல், தலைவலி, சோர்வு, வலி மற்றும் தொண்டை புண் ஆகியவைகள் தான். டைபாய்டு வராமல் தடுக்க கைகளை அடிக்கடி கழுவ வேண்டும். தெருவோரம் விற்கும் உணவுகளை சாப்பிடக் கூடாது மற்றும் சத்தான பானங்களை அதிகமாக குடிக்க வேண்டும்.

வைரஸ் காய்ச்சல்

பொதுவாக வைரஸ் காய்ச்சல் அனைத்து காலங்களிலும் வருவதுண்டு. மிதமான முதல் அதிகமான காய்ச்சல் தான் இதற்கான அறிகுறி. இந்த காய்ச்சல் பல நாட்கள் வரை நீடிக்கும். மேலும் இதனுடன் சளியும் இருமலும் சேர்ந்து இருக்கும்.

காலரா

பருவக் காலத்தில் வரும் ஆபத்தான வியாதியான காலரா, அசுத்தமான உணவு மற்றும் தண்ணீரை பயன்படுத்துவதாலும், சுத்தமில்லாமல் இருப்பதாலும் வரும் நோயாகும். இந்த காலரா இருந்தால், கடுமையான வயிற்றுப் போக்குடன் பேதியும் சேர்ந்து இருக்கும். ஆகவே சுத்தமான தண்ணீரை குடிப்பதாலும், சுத்தமான சுற்றுசூழலில் இருப்பதாலும் காலராவை தடுக்கலாம்.

மஞ்சள் காமாலை

மஞ்சள் காமாலையை ஏற்படுத்தும் கிருமிகள், சுத்தமில்லாத உணவுகள் மற்றும் தண்ணீரின் மூலம் வருகிறது. சோர்வு, மஞ்சள் நிற சிறுநீர், வாந்தி மற்றும் ஈரல் செயல் பிறழ்ச்சி ஆகிவைகள் தான் இதன் அறிகுறிகள். தெருவில் விற்கும் உணவை சாப்பிடாமல் இருந்தால், மஞ்சள் காமாலையில் இருந்து பாதுகாப்பாக இருக்கலாம். வயிற்றில் ஏற்படும் தொற்று இந்த காலத்தில் இரைப்பை குடல் சுழற்சி போன்ற தொற்றுக்கள், வயிற்றில் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. இது வாந்தி, பேதி மற்றும் வயிற்று வலியை உண்டாக்கும். இதனை தடுக்க தெருவோரம் விற்கும் உணவுகளை தவிர்த்து, கொதிக்க வைத்த தண்ணீரையும், அதிக அளவில் சத்தான பானங்களையும் குடிக்க வேண்டும்.

மழைக்காலங்களில் சிறந்த உணவு

மதிய உணவின்போது தூதுவளை ரசம் வைத்து சாப்பிடலாம். இரவு தூங்குவதற்கு முன், பாலில் மஞ்சள் தூள், மிளகுத்தூள், பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிடுவது நல்லது. மழைக் காலங்களில் எல்லா காய்கறிகளையும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். சிலருக்கு தண்ணீர் சத்து அதிகமுள்ள காய்கறிகள் ஒத்துக்கொள்ளாது. நீர்ச்சத்துக்கள் நிறைந்த சுரைக்காய், பூசணி, புடலை, பீர்க்கன், வெள்ளரி போன்ற காய்கறிகளை, மழைக் காலங்களில் உணவில் சேர்த்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.

பொரியல் செய்யும்போது அவற்றில் மிளகு பொடியைச் சேர்த்துச் சமைத்து சாப்பிடுவது நல்லது. இரவு உணவில் பச்சைப்பயறு, கேழ்வரகு, கீரை ஆகியவற்றைச் சேர்க்கக் கூடாது. மழைக் காலங்களில் பிஸ்கட் சீக்கிரம் நமத்துப் போகாமல் இருக்க, பிஸ்கட் வைக்கும் டப்பாவில் சிறிது சர்க்கரை துகள்களை போட்டு வைக்கலாம். கீரைகளை நன்றாக தண்ணீரில் கழுவி பயன்படுத்த வேண்டும். பால் மற்றும் பால் சார்ந்த தயிர், வெண்ணெய், நெய் போன்றவற்றையும் அதிகம் சாப்பிடக்கூடாது. ஆனால் மோர் சாப்பிடலாம். உடலுக்கு நல்லது.

உணவில் காரம், கசப்பு, துவர்ப்பு சுவையுள்ள உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். அசைவ உணவான மீன், முட்டை, கறி, சிக்கன் போன்றவற்றை பிரஷ்ஷாக சாப்பிட வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளையும் அதிகம் சாப்பிடக்கூடாது. சூடாக சாப்பிட வேண்டும். பஜ்ஜி, போண்டா அதிகம் சாப்பிடாமல், உப்பு உருண்டை, இட்லி சாம்பார், பிரட்

ரோஸ்ட் என சாப்பிடலாம். மேலும் தினமும் சாப்பிடும் உணவையே சற்று சூடாகச் சாப்பிட்டால் போதும்.

உணவுகளை பாதுகாக்க

சில உணவுப் பொருட்களில் பூஞ்சைகள் பரவும் பருவம் மழைக்காலம். இதனைத் தவிர்க்க சாப்பிடக் கூடிய அளவிற்கு மட்டுமே சமைப்பது நல்லது. பருப்பு, மாவு போன்றவற்றை இறுக்கமான, காற்று புகாதபடி உள்ள பாட்டில்களில் வைக்க வேண்டும். பயறு வகை களை பூச்சிகள் அல்லது புழுக்களிடமிருந்து காப்பாற்ற, அவற்றின் மீது கடுகு எண்ணெயை சிறிதளவு தெளித்து வைக்கவும். உணவு தானியங்களை புத்துணர்வுடன் வைத்திருக்க அவற்றின் மீது சிறிதளவு ஆமணக்கு எண்ணெயையும் தெளிக்கவும்.

சமைத்த உணவை 2 மணி நேரத்திற்கு ஒரு முறை கிளறி விட்டால், அதில் பாக்டீரியாக்கள் உட்காராது. சப்பாத்திகளை சில்வர் தாள்களில் சுற்றி வைப்பதன் மூலமாக பாதுகாத்திட முடியும். காய்கறிகள் மற்றும் பழங்களை சுத்தமாக கழுவிவிட்டு, லேசாக காய வைக்கவும். அதன் பின்னர் ஃப்ரிட்ஜ்ஜில் வைக்கவும்.

சுவையும் சத்தும் நிறைந்த வரகு அரிசி பிரியாணி

வரகு அரிசியானது மக்னீசியம், பாஸ்பரஸ், மாங்கனீஸ், நார்ச்சத்து, இரும்பு, கால்சியம் போன்ற அனைத்தையும் அதிக அளவில் கொண்டுள்ளது, இந்த வரகு அரிசியில் பிரியாணி செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

தேவையான பொருட்கள் :

வரகு அரிசி-4 டம்ளர், பட்டை-2, கிராம்பு-3, ஏலக்காய்-2, நெய்-150 கிராம், மிளகாய்த் தூள்-2 ஸ்பூன், மஞ்சள் தூள்-அரை ஸ்பூன், பச்சைப் பட்டாணி-100 கிராம், வெங்காயம்-3, தக்காளி-3, புதினா, மல்லித்தழை மற்றும் இஞ்சி பூண்டு பேஸ்ட்- தேவையான அளவு, கேரட்-2, பீன்ஸ்-100 கிராம், உருளைக் கிழங்கு-2, தயிர்-1 கப்

செய்முறை:

முதலில் வரகு அரிசியை வறுத்துக் கொள்ளவும். அடுத்து அடுப்பில் குக்கரை வைத்து அதில் நெய்யை ஊற்றி பட்டை, கிராம்பு, ஏலக்காய் சேர்த்து வதக்கவும். பின்னர் வெங்காயம், தக்காளி, இஞ்சிப் பூண்டு விழுது சேர்த்து வதக்கவும். அதைத் தொடர்ந்து, தக்காளி, பச்சை மிளகாய், மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், உப்பு, தயிர், புதினா, கொத்தமல்லித் தழை, காய்கறிகள் சேர்த்து வதக்கிய பின்னர் அதனுடன் வரகு அரிசியை போட்டு போதுமான அளவு தண்ணீர் சேர்த்து கிளறி விசில் போட்டு 10 நிமிடத்திற்கு மூடி வைக்கவும். 10 நிமிடங்கள் கழித்து குக்கரை இறக்கி நெய் சேர்த்துக் கிளறி விடவும். சுவையும் சத்தும் மிகுந்த இந்த வரகு அரிசி பிரியாணியை போதுமான சூடுடன் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

மண்பாண்டங்களின் மகத்துவம்

நம் முன்னோர்கள், சமைக்க, சாப்பிட, நீர் அருந்த என அனைத்திற்கும் பெரும்பாலும் மண்பாண்டங்களையே பயன்படுத்தினர். இதன் காரணமாகவே அவர்கள் நீண்ட காலம் ஆரோக்கியமாகவும், நோய்களுக்கு இடம் கொடுக்காமலும் வாழ்ந்தனர். பூமியில் இருந்து எடுக்கப்படும் மண்ணைக் கொண்டு தயாரிக்கும் மண்பாண்டங்களில் இயற்கையாகவே பல்வேறு வைட்டமின்கள் உள்ளன. அதில் B12 வைட்டமினும் அடங்கியுள்ளது.

மண்பானையில் சிறு சிறு துவாரங்கள் இருக்கும். வெளியில் உள்ள வெப்பநிலை அதிகரிக்கும்போது, இந்த நுண்துவாரங்கள் வழியாக பானையின் வெப்பமும், தண்ணீரின் வெப்பமும் தொடர்ந்து ஆவியாவதன் மூலம் வெளியேற்றப்படுகிறது. அதனால்தான் மண்பானையில் சேமிக்கப்படும் தண்ணீர் சில்லென்று குளிர்ச்சியாக இருக்கிறது. அவ்வாறு மண்பானையில் தண்ணீரைச் சேகரிக்கும்போது, வெட்டிவேர் போன்றவற்றை ஊறவைத்து, பின்பு வடிகட்டிக் குடிப்பது உடலுக்கு நல்லது.

மண்பாண்டத்தில் சமைப்பதால், வெப்பம் சீராக பாத்திரம் முழுவதும் பரவுகிறது. மேலும், நீண்ட நேரம் வெப்பத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் தன்மை மண்பாண்டங்களுக்கு இருப்பதால், உணவு சூடாகவே இருக்கும். அவ்வளவு சீக்கிரம் கெட்டுப் போகாது. பாத்திரம் முழுவதும் வெப்பம் மெதுவாகப் பரவுவதால், உணவில் உள்ள ஊட்டச்சத்துக்கள் அப்படியே நிலைத்திருக்கின்றன. இதுவே மண்பாண்டத்தில் சமைக்கப்படும் உணவு கூடுதல் சுவையுடன் இருப்பதற்கு முக்கியக் காரணம்.

மண்பாண்டங்களில் ஆல்கலைன்கள் நிறைந்துள்ளன. இவை தண்ணீரின் அமிலத்தன்மையோடு இணைந்து, உடலின் pH தன்மையை சமன் செய்கிறது. நீரில் அமிலத்தன்மை சமன் செய்யப்படுவதால், வாயுத்தொல்லைகள் நீங்கும்.

மண்பாண்டங்களில் சேமிக்கப்படும் தண்ணீரைப் பயன்படுத்துவது ஜீரண உறுப்புகள் சிறப்பாக செயல்படத் தூண்டுகிறது. மேலும், தசைகள் வளர்ச்சி, எலும்புகள் மண்டலத்தை உறுதியாக்குதல் உள்ளிட்டவற்றுக்கு முக்கியக் காரணியாகச் செல்படும் டெஸ்டோஸ்டெரோன் (testosterone) அளவை சமநிலையில் வைக்கவும் உதவுகிறது.

மண்பாண்டத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரைப் பருகுவது, சன் ஸ்டோக்கில் (Sunstroke) இருந்து நம்மைப் பாதுகாக்கிறது. மற்றொரு நன்மை என்னவென்றால், தொண்டையில் நோய் தொற்று உள்ளவர்கள் மண்பாண்டங்களில் உள்ள நீரினைப் பருகுவதால், தொற்று நீங்கி குணமடைவர். வெப்பநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்கள் நம்மைத் தாக்காமல் இருக்க மண்பாண்டங்களே சிறந்தவை.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ். பி. வேலுமணி அவர்களும், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களும் தமிழ்நாடு மாநில ஊரகப் புத்தாக்கத் திட்ட புதிய அலுவலகத்தை 11.09.2020 அன்று திறந்து வைத்தனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களும், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும் கிண்டி, சிட்கோ வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் புதிய அலுவலகத்தை 11.09.2020 அன்று திறந்து வைத்தனர்.

பின்னர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

“தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டமானது, 918 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கியின் கடனுதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்டங்களில் 120 வட்டாரங்களைக் சேர்ந்த 3,994 கிராம ஊராட்சிகளில் ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், வருமானத்தை பெருக்கவும், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுக்கவும் 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் கிராமப்புற

மக்களை வறுமை மற்றும் கடனிலிருந்து பாதுகாக்கவும், அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கோவிட்-19 சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டமானது தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் ரூ.300 கோடி மதிப்பில் மொத்தம் 1,39,574 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 28.05.2020 அன்று துவக்கி வைக்கப் பட்டது.

இத்திட்டத்தின் மூலம் ஊராட்சிகளில் உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர் மற்றும் உறுப்பினர் குடும்பங்களைச் சார்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளில் உள்ள உறுப்பினர்கள் மற்றும் புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய இளைஞர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கோவிட்-19 சிறப்பு நிதியுதவி தொகுப்பின் மூலம் நாளது தேதி வரை 254.94 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு மொத்தம் 1,63,694 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். தனிநபர் தொழில் முனைவோருக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் கடன் உதவியாக ரூ.159.6 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 49,652 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மாற்றுத்திறனாளிகள், விதவைகள், திருநங்கைகள், ஆதரவற்றோர் உள்ளிட்ட நலிவுற்றோரின் தொழில் மேம்பாட்டிற்காக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் மூலம் ரூ.49.88 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 33,603 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய திறன்பெற்ற இளைஞர்களுக்கு சுய தொழில் துவங்குவதற்காக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் மூலம் ரூ.20.47 கோடி வழங்கப்பட்டு 2,052 இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

செயல்பாட்டில் உள்ள 1270 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ஒருமுறை மட்டும் வழங்கப்படும் மூலதன மானியம் ரூ.19.05 கோடி வழங்கப்பட்டு 56,003 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். செயல்பாட்டில் உள்ள 201 தொழில் குழுக்களுக்கு ஒருமுறை மட்டும் வழங்கப்படும் மூலதன மானியம் ரூ.3.01 கோடி வழங்கப்பட்டு 2,928 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். .செயல்பாட்டில் உள்ள 29 உற்பத்தியாளர் கூட்டமைப்பு ஒருமுறை மட்டும் வழங்கப்படும் மூலதன மானியம் ரூ.2.09 கோடி வழங்கப்பட்டு 19,039 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். திட்டப் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் ரூ.83.00 இலட்சம் செலவில் 417 பணியாளர்களுக்கு மருத்துவ காப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இதுநாள் வரை நுங்கம்பாக்கத்தில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சிறப்புடன் செயல்பட்டு வந்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட அலுவலகம் தற்போது கிண்டியில் அமைந்துள்ள சிட்கோ வளாகத்தின் 5வது தளத்தில் புதுப்பொலிவுடன் செயல்பட உள்ளது என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட தலைமைச் செயல் அலுவலர் திருமதி ச.ப..கார்த்திகா, இ,ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகத் தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.கஜலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் விருகை திரு.வி.என்.ரவி அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை கூடுதல் இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் திட்ட பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புதுவாழ்வு அளித்த ஊரகப் புத்தாக்கத் திட்டம்

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், மாபுஸ்கான்பேட்டை ஊராட்சியில் வசிக்கும் மணிமேகலை ஆகிய நான், மண்பாண்டம் செய்யும் தொழில் செய்து வருகிறேன். நான் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுவின் மூலம் கடனுதவி பெற்று மண்பாண்டங்கள் தயாரித்து, விற்பனை செய்து. அதில் கிடைக்கும் வருமானத்தில் நான் பெற்றக் கடனை திருப்பிச் செலுத்தி வருகிறேன். சராசாரியாக நாள் ஒன்றுக்கு 30 பானைகள் வீதம் தோராயமாக ஒரு மாதத்திற்கு 600 பானைகள் உற்பத்தி செய்து, அளவு பொறுத்து ஒரு பானை ரூ.35/- வீதம் 600 பானைகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் ரூ. 21,000/- மொத்த வருமானத்தில் உற்பத்தி செலவு போக எனக்கு இலாபமாக மாதந்தோறும் கிடைக்கும் ரூ.10,000/-த்தில் எனது குடும்பத்தை சிறப்பாக நடத்தி வந்தேன். இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் முதல் அறிவிக்கப்பட்ட கொரோனா ஊரடங்கு காரணமாக சுப நிகழ்ச்சிகள், திருமணங்கள், திருவிழாக்கள், சடங்குகள் போன்றவற்றிற்கு தடை விதிக்கப்பட்டதால் நான் செய்து வந்த மண்பாண்டம் தொழில் பெருமளவு முடக்கப்பட்டு, வருமானத்தை இழந்ததால், கையிருப்பைக் கொண்டு கடந்த நான்கு மாதங்கள் குடும்பம் நடத்துவதற்கு தேவையான செலவுகளை செய்து வந்தோம். இதன் காரணமாக கையிருப்பும் தீர்ந்து விட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கோவிட்-19 சிறப்பு நிதி உதவி தொகுப்பில் தனி நபர் தொழில் முனைவோருக்கான கடனுதவி வேண்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் குழுவின் மூலம் விண்ணப்பம் செய்தேன். விண்ணப்பித்த சில நாட்களிலேயே திட்ட பணியாளர் மற்றும் கூட்டமைப்பு நிர்வாகிகள் கள ஆய்வு செய்து, எனது தொழில் முடக்கத்தை கருத்தில் கொண்டு நான் கேட்ட தொகையான ரூ. 20,000/-த்தை எனக்கு கடனுதவியாக அளிக்கப்பட்டது.

இந்தத் தொகையினை மூலதனமாக வைத்து தற்போது மண்பாண்டத் தொழிலின் கருவியான சக்கரத்தை சரி செய்து, பானை செய்வதற்கான மண் எடுத்து, கொரோனா காலத்தில் நொடிந்த நிலையில் இருந்த எனது மண்பாண்ட தொழிலை ஊக்கத்துடன் செய்து தற்போது கணிசமான அளவில் இலாபம் ஈட்டி வருகிறேன். எனக்கு கடனுதவி வழங்கி பேருதவி புரிந்த தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலுக்கு புத்துயிர் கொடுத்த ஊரகப் புத்தாக்கத் திட்டம்

என் பெயர் கனகவள்ளி, (க/பெ. முருகன்) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், கீழநத்தம் கிராமத்தில் வசித்து வரும் நான், 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் செங்கல் சூளையில் கூலிக்கு வேலை செய்து வருகிறார். எங்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த நான், கடந்த இரண்டு வருடங்களாக நாற்றங்கால் பண்ணை (Nursery Garden) அமைத்து கொய்யா, மா, மாதுளை, புங்கை, வேம்பு, முருங்கை, பப்பாளி போன்ற அனைத்து வகையான மரம் மற்றும் செடி வகைகள் நடவு செய்து, நிலத்தில் நடவு செய்யும் பருவம் வரை வளர்த்து பின்னர் விற்பனை செய்து வருவாய் பெற்று வருகிறேன்.

இந்நிலையில் கோவிட்-19 ஊரடங்கால் போக்குவரத்து மற்றும் வேலை வாய்ப்புகள் இல்லை என்பதால் எனது தொழில் நலிவுற்று எனக்கு அதிக அளவில் நட்டம் ஏற்பட்டது. தற்போது ஊரடங்கு தளர்வு செய்த நிலையில் எங்கள் ஊராட்சியில் உள்ள கீழநத்தம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கோவிட்-19 சிறப்பு நிதி தொகுப்பு நிதியிலிருந்த எனக்கு ரூ. 45.000/- கடனாகக் கொடுத்தனர். ஏற்கனவே நான் செய்து வந்த நர்சரி கார்டன் தொழிலை விரிவுபடுத்தவும், தொடர்ந்து இத்தொழிலை நல்ல முறையில் செய்யவும் இந்த தொகை எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. எனக்கு கடனுதவி வழங்கி, எனது தொழிலுக்கு புத்துயிர் கொடுத்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கும், தமிழக அரசிற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் குழுவை மீண்டும் செயல்பட வைத்த திட்டம்

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்தில் உள்ள முத்தனேந்தல் ஊராட்சி, நாடார் குடியிருப்பில் செயல்பட்டு வரும் `தென்றல் தென்னங்கீற்று உற்பத்தியாளர் தொழில் குழு'வின் உறுப்பினர்கள் தங்கள் தொழில் குழு குறித்து கூறுவதைக் கேட்போமா... `எங்கள் குடியிருப்பில் உள்ள 25 குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து 2014ஆம் ஆண்டு `தென்றல் தென்னங்கீற்று உற்பத்தியாளர் தொழில் குழு'வைத் துவக்கினோம். எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தென்னங்கீற்று மற்றும் தென்னங்கீற்று சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். இது எங்களின் குலத் தொழில் என்பதால் எங்களுடைய குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரும் சிறப்பாக தென்னங்கீற்று பின்னுவதில் திறமை பெற்றவர்களாக விளங்கினார்கள். எங்களின் திறமையை அறிந்து சிவகங்கை மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலம் எங்களை இணைத்து `ஒத்த தொழில் குழு' அமைத்தார்கள். எங்கள் தொழில் குழு மூலம் வங்கி கணக்கு தொடங்கினோம். சேமிப்பு, சந்தா போன்ற நடவடிக்கைளையும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தோம்.

எங்கள் தொழில் குழுவின் செயல்பாட்டை அறிந்த மகளிர் திட்டம் எங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயினை மானியமாக வழங்கியது. அந்தத் தொகை மற்றும் எங்களின் சேமிப்பு ஆகியவற்றைக் கொண்டு எங்களுக்கு உள்கடன் வழங்கப்பட்டது. அந்தத் தொகையை வைத்து தென்னந் தோப்பு குத்தகைக்கு எடுப்பது, தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் வாங்குவது போன்ற செயல்களில் ஈடுபட்டோம்.

இந்நிலையில் கொரோனா ஊரடங்கு காரணத்தினால் எங்களுடைய தொழிலை செய்ய முடியாமலும், உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்ய முடியாமலும் நாங்கள் சிரமப்பட்டோம். எங்களுடைய தென்னங்கீற்று உற்பத்தியாளர் சங்கத்தில் உள்ள குடும்பங்கள் அனைத்தும் வருமானமின்றியும், தொடர்ந்து தொழில் செய்ய முடியாமலும் இருந்த போது, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் முத்தனேந்தல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் உற்பத்தி செய்யும் தொழில் குழுவிற்கு ஒரு முறை மூலதன மானியம் வழங்கப்படும் என்ற தகவல் கிடைத்தது. நாங்கள் எங்கள் உற்பத்தியாளர் குழுவிற்கு மூலதன மானியம் கோரும் விண்ணப்பத்தினை மாவட்ட அலுவலகத்தில் சமர்ப்பித்தோம். எங்களின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எங்கள் தொழில் குழுவிற்கு மூலதன மானியமாக ரூ. 1,50,000/- எங்கள் தொழில் குழு வங்கி கணக்கில் வழங்கப்பட்டது. இந்த மூலதன மானியத்தை வைத்து, நாங்கள் மீண்டும் தென்னந் தோப்பினைக் குத்தகைக்கு எடுத்து எங்கள் தொழில் குழுவை மேலும் சிறப்பாக செயல்பட வைக்க உதவிய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு எங்கள் `தென்றல் தென்னங்கீற்று உற்பத்தியாளர் தொழில் குழு'வின் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

ஊக்கம் தந்த ஊரகப் புத்தாக்கத் திட்டம்

மல்லிகைப்பட்டு ஊராட்சியில் வசித்தும் வரும் என் பெயர் ரேவதி, க/பெ. சக்திவேல், நான் கடந்த 10 ஆண்டுகளாக பேக்கரி தொழிலை செய்து வருகிறேன். நான் தயாரிக்கும் பேக்கரிப் பொருட்களை என்னுடைய கணவர் காரில் எடுத்துச் சென்று எங்கள் ஊரைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கடைகளில் விற்பனை செய்து வருவார். இதன் மூலம் வருவாய் பெற்று எனது குடும்பத்தை நடத்தி வந்தேன். கொரோனா ஊரடங்கு அறிவித்ததில் இருந்து நான் தயாரித்தப் பொருட்களை வெளியிடங்களுக்குச் சென்று விற்பனை செய்ய முடியவில்லை. உற்பத்தி செய்த பொருட்களும் வீணாகின. போட்ட முதலீட்டை எடுக்க முடியாமல் பெருத்த நஷ்டம் ஏற்பட்டதால் மிகுந்த கவலையோடு நானும் எனது கணவரும் இருந்தோம்.

அப்போதுதான் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கோவிட்-19 சிறப்பு நிதி தொகுப்பு மூலம் தனிநபர் தொழில் முனைவோருக்கான கடனுதவிக்காக முல்லை மகளிர் சுய உதவிக்குழு மூலமாக விண்ணப்பித்து இருந்தேன். தனிநபர் தொழில் முனைவோருக்கான கடனாக ரூ.40,000/- பெற்ற நான் எனது பேக்கரிக்குத் தேவையான மூலப் பொருட்களை வாங்கி மீண்டும் உற்சாகத்தடன் பேக்கரிப் பொருட்களை தயாரிக்கத் தொடங்கினேன். தற்போது ஊரடங்கு தளர்வின் காரணமாக நான் தயாரிக்கும் பேக்கரிப் பொருட்களை எனது கணவர் வெளியூர்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகிறார். தக்க சமயத்தில் எங்களுக்கு ஊக்கம் அளித்த ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு நானும் எனது கணவரும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்மா இருசக்கர வாகனத் திட்டம் 2020 - 2021

தொலைநோக்கு பார்வை கொண்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்கள் தங்களது பணியிடங்களுக்கு செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து, இந்திய திருநாட்டிலேயே முதன் முறையாக, 'மகளிர் பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் இரு சக்கர வாகனங்கள் (Moped/Scooter)வாங்க 50 சதவீத மானியம் வழங்கும்' ஒரு முன்னோடி திட்டத்தினை அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு இத்திட்டத்தினை 2017-18ம் ஆண்டு முதல் செயல் படுத்தி வருகிறது. இதுவரை இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் அவர்கள் தங்களின் தொழில்களை மேற்கொள்வதற்கும், பணியிடங்கள், வங்கிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் தங்கு தடையின்றி தமது பணிகளை மேற்கொள்வதற்கும், எவ்விடத்திற்கும் பாதுகாப்பாகவும், எளிதிலும் சென்று வர ஏதுவாக இரு சக்கர வாகனங்களை மானியத்துடன் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியம்:

அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் 'உழைக்கும் ஏழை மகளிருக்கு' வாகனத்தின் விலையில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000/- மற்றும் மாற்றுத்திறனாளிக்கு 50 விழுக்காடு அல்லது ரூ. 31,250/- வழங்கப்படும்.

பயனாளிகளின் தகுதிகள் :

தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள், சுய தொழில் புரியும் பெண்கள், ஆண்டு வருமானம் ரூ 2,50,000/-க்கு மிகாமல் உள்ள சிறப்பு கால முறை ஊதியம் பெறும் அங்கன்வாடி பணியாளர் / உதவியாளர், சத்துணவு பொறுப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர், கூட்டுறவு சொசைட்டி, அங்காடி பணியாளர் மற்றும் பல்வேறு அரசு துறை மற்றும் நகராட்சி, ஊராட்சி அமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்கள், அரசு திட்டங்களில் பணிபுரியும் பணியாளர்கள், தொகுப்பூதியம், தினக்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பெண்கள் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

தகுதிகள் மற்றும் வயது வரம்பு :

1. 18 முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.
2. இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்.
3. ஆண்டு வருமானம் ரூ 2,50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

வாகனங்களுக்கான நிபந்தனைகள் :

1. இருசக்கர வாகனம் தேர்வுக்குழுவின் அனுமதிக்குப் பின்னர் வாங்கியதாக இருக்க வேண்டும்.
2. 125-ccக்கு மிகாமல், கியர் இல்லாத மற்றும் ஆட்டோ கியர் உள்ள வாகனமாக இருத்தல் வேண்டும்.
3. 1-1-2018க்கு பிறகு தயாரிக்கப்பட்ட வாகனமாக இருத்தல் வேண்டும்.

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:

1. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் : 3
2. ஆதார் அட்டை நகல்
3. பிறப்புச் சான்று/ பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல்
4. சாதிச் சான்றிதழ் (SC/ST மட்டும்)
5. பணிபுரிவதற்கான சான்று
6. வருமானச் சான்று நகல்
7. ஓட்டுநர் உரிமம் நகல்
8. மாற்றுத் திறனாளியாக இருப்பின் அடையாள அட்டை நகல்
9. இருசக்கர வாகனத்திற்கான விலைப்புள்ளி (Quotation/ Proforma Invoice)
10. வங்கி கணக்கு புத்தக நகல்

இத்திட்டத்திற்கான விண்ணப்பங்களை மண்டல அலுவலகம்/ ஆணையர் அலுவலகம் / ஊராட்சி ஒன்றிய அலுவலகம் / பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் வாகன விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

www.chennaicorporation.gov.in இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கீழ்கண்ட அலுவலகங்களில் சமர்ப்பிக்கலாம்.

1. மாநகராட்சி - மண்டல அலுவலர் அலுவலகம்
2. நகராட்சி - ஆணையர் அலுவலகம்
3. ஊராட்சி ஒன்றியம் - வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அலுவலகம்
4. பேரூராட்சி - செயல் அலுவலர் அலுவலகம் / உதவி இயக்குநர் அலுவலகம்

மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் பெற்ற பெண்களின் மகிழ்ச்சி

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னத திட்டமான பணிபுரியும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தால் இன்று லட்சக்கணக்கான பெண்கள் பயனடைந்து உள்ளனர். மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் பெற்ற பெண்கள் தங்களின் மகிழ்ச்சியை நம்முடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டம்

என் பெயர் உமா மகேஸ்வரி (க/பெ. அருண்), கும்பகோணம் நகராட்சி மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் நான் தினமும் வேலைக்கு சைக்கிளில் சென்று வருவேன். இதனால் பணிக்கு செல்ல கால தாமதம் ஆகியதோடு, மிகவும் சிரமமாகவும் இருந்தது. பெண்களின் வளர்ச்சியில் முக்கியத்துவம் அளிக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உழைக்கும் மகளிருக்கான அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் என்னை பயனாளியாக தேர்வு செய்து இருசக்கர வாகனத்தினை மானியத்துடன் வழங்கியுள்ளனர். தினமும் காலை 4.00 மணிக்கு வேலைக்குப் புறப்பட்ட நான், தற்போது வீட்டு பணிகளை முடித்துவிட்டு, 8.30 மணிக்கு இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்று வருவதால் நேரம் மிச்சப்படுகிறது. அம்மா இருசக்கர வாகனம் வாங்கியது மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம் குகைய நல்லூர் ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் ராஜலட்சுமி. நான் குகையநல்லூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் துணையோடு வெல்மா அங்காடி வைத்து சிறுதொழில் செய்து வருகிறேன். அதனால் கடைக்கு தேவையான மளிகைப் பொருட்களை வாங்கி வருவது என்பது சிரமமாக இருந்தது. ஆனால் தற்போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ரூ. 25,000/- மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனம் வாங்கியதன் மூலம் எனது கடைக்குத் தேவையானப் பொருட்களை வாங்கி வருவது எளிதாக உள்ளது. மேலும் எனது நேரமும் சேமிக்கப்படுகிறது. என்னால் அதிக அளவு வருமானம் ஈட்ட முடிகிறது. எனது குடும்ப சூழல் மேம்பட்டுள்ளது. இதற்குக் காரணமாக இருந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேனி மாவட்டம்

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டாரம், சில்வார்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த நாகஜோதி (க.பெ பெருமாள்) ஆகிய நான் தையலகம் ஒன்றை கடந்த 5 வருடங்களாக நடத்தி வருகிறேன். சில்வார்பட்டி மற்றும் ஜெயமங்கலம் ஆகிய இரண்டு ஊர்களிலும் எனக்கு தையலகம் இருப்பதால் அங்கு சென்று வர மிகவும் சிரமப்பட்டு வந்தேன். இந்நிலையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய இருசக்கர வாகனம் வாங்கியது எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன், கடைகளுக்குச் சென்று வரும் நேரமும் குறைகிறது. இதன் மூலம் தையலகத்திற்கான பொருட்கள் வாங்குவதற்கும், தைத்த துணிகளை வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும் மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (81,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

22-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம்

- சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

" தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் "

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.